அ.வ.எண்.86/2017 நாள்: 17.03.2026

வா.சா.1 திரு. வனரோஜா

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1–ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரத்திலுள்ள அளவும், பட்டாவில் உள்ள அளவும் வித்தியாசமாக உள்ளது என்பதால் அதை சரி செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சொத்து விபரத்தில் முதல் இன சொத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தை சரி செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு பத்திரப்படி 20 குழி இடம் பட்டாவில் 10 குழி இடம் தான் உள்ளது. 2–வது இன சொத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தை சரி செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரப்படி 5 எனக்கு பாத்தியம் ஆனால் அதற்கு பட்டா வழங்கப்படவில்லை. முதல் மற்றும் இரண்டு இன சொத்துக்களையும் சேர்த்து பத்திரப்படி சரியாக உள்ளதா என்றால் ஆமாம்.

2) தாவா சொத்துக்கள் இரண்டும் என்வசம் உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்துக்களை இரண்டையும் சேர்த்து காம்பவுண்ட் சுவர் உள்ளதா என்றால் இல்லை. ஒரு சொத்தை பொறுத்து காம்பவுண்ட் சுவர் உள்ளது. 11.02.2016 ல் சமரச உடன்படிக்கை ஏற்பட்டு ஒவ்வொருக்கும் தனித்தனியாக விஸ்தீரணத்தை குறிப்பிட்டு பாகம் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு பாகத்தினரும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான் ஆனால் அந்த பத்திரப்படி எனக்கு எந்த ஒரு பாகமும் கொடுக்கவில்லை. என்னுடைய கிரைய சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 3600 சதுரடி என்றால் அந்த அளவுகள் எனக்கு சரியாக தெரியவில்லை. ஏற்கனவே சமரச பேசியதில் எனக்கு 701 சதுரடி ஒதுக்கப்பட்டது என்றால் பெயரளவில் பேசினார்கள் அவ்வாறு ஒதுக்கவில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

S.d/Vanaroja

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.17 18:49:13 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU